Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# Women's Lives in the Literatures of the Sangam Era: Silappathikaram

**P. Dharani**, Assistant Lecturer, Hindu Civilization, Department of Linguistics, Southeastern University of Sri Lanka.
**ORCiD: https://orcid.org/0009-0004-9645-6594**
**DOI: 10.5281/zenodo.14744840**

## Abstract

*The period from 3 to 6 AD in the history of Tamil literature is the Sangam Era. Since the Sangams disappeared, it was called the Sangam Era and was also known as the Aranoor Period. Silappathikaram is one of the literatures that emerged during the Sangam Era. Silappathikaram is one of the five great epics written in Tamil. This book is also presented as a continuous poem with a patti. All three elements of literature, namely, literature, music, and drama, can be found in this epic. Epics have an independent protagonist and are composed with descriptions of the country, city, and nature and carry the lofty goals of virtue, material pleasure, and home. Generally, epics are composed with kings as the protagonists. But this poem is composed with Kovalan, the best of the people, and Kannagi, the goddess of chastity, as the protagonists. This is the uniqueness of this poem. Silappadikaram has been created to elevate women. It can be seen that during the post-Sanga period, women were excellent in domestic life and excelled in virtue. The things associated with women's lives are aspects of life. The aspects of women's lives such as domestic life, hospitality, chastity, childbearing, charity and asceticism can be seen in the Silappadikaram through Kannagi, Madhavi, shepherds' clan women and Kaundi Adi. The research problem is to identify how women's lives are depicted in the Silappadikaram that emerged during the post-Sanga period as part of the Aranoo period. The main objective is to highlight the aspects of women's lives in the Silappadikaram. This study is qualitative.*

**Keywords:** Sangam Period, *Silapathikaram*, Women, Life, Kannaki, Hospitality.

## References

[1] Shanmugam Chettiar, R.K. *Silappathikaram*. Pudumalar Nilayam, Chennai.1945.
[2] Sanjeevi, N. *Silappathikaram Viruntthu*. Kavya Publications, Chennai. 2005.
[3] Sivagnanam, M.P. *Silappathikaram Thiranaivu*. Poongodi Publishing House. 2005.
[4] Sudhakar, K. *Kannagi Kathaigal*. Pavai Printers, Chennai. 2011.
[5] Megarasa, T. *Silappathikaram Pathirangalum Kannagi Valakkurai Pathirangalum*. Batticaloa. 2015.
[6] https://ta.m.wikipedia.org Accessed on 01.11.2024.
[7] https://www.dinamani,com.junction/ettaam-swarangal/2018/jun/14 Accessed On 08.11.2024.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# சங்க மருவிய கால இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல்: *சிலப்பதிகாரம்*

**ப. தாரணி**, உதவி விரிவுரையாளர், இந்து நாகரீகம், மொழித்துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம்.
ORCiD: https://orcid.org/0009-0004-9645-6594
DOI: 10.5281/zenodo.14744840

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழக இலக்கிய வரலாற்றில் கி.பி 3 தொடக்கம் 6 வரையான காலப்பகுதி சங்க மருவிய காலமாகும். சங்கங்கள் மருவி போனதால் சங்க மருவிய காலம் என அழைக்கப்பட்டதோடு அறநூற் காலமாகவும் விளங்கியது. சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்றாகும். சிலப்பதிகாரம் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகும். இந்நூல் பாட்டிடையிட்ட தொடர்நிலைச் செய்யுள் எனவும் வழங்கப்படுகிறது. இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம். காப்பியம் என்பது தன்னிகரில்லாத தலைவனை உடையதாகவும் நாடு, நகர், இயற்கை வருணனைகள் பெற்று அறம், பொருள் இன்பம், வீடு என்னும் உயர்ந்த நோக்கங்களைத் தாங்கி அமைவதாகும். பொதுவாக அரசர்களையே தலைவர்களாகக் கொண்டு காப்பியம் இயற்றல் இயல்பாகும். ஆனால் இக்காப்பியம் மக்களுள் சிறந்தவனாகிய கோவலனையும் கற்பின் செல்வியாகிய கண்ணகியையும் காப்பியத் தலைவர்களாக வைத்து இயற்றப்பெற்றுள்ளது. இது இக்காப்பியத்தின் தனிச்சிறப்பாகும். பெண்மைக்கு உயர்வுதரும் நோக்கில் சிலப்பதிகாரம் படைக்கப்பட்டுள்ளது. சங்க மருவிய காலத்தில் பெண்கள் இல்லற வாழ்வில் சிறந்தவர்களாகவும் அறத்தில் மேன்மை பெற்றவர்களாகவும் திகழ்ந்துள்ளமையைக் காணலாம். பெண்களின் வாழ்வோடு இணைந்த விடயங்கள் வாழ்வியல் அம்சங்களாகும். பெண்களின் வாழ்வியல் அம்சங்களான இல்லற வாழ்வு, விருந்தோம்பல், கற்புநெறி, குழந்தைப்பேறு, தானம் மற்றும் துறவறம் போன்றன சிலப்பதிகாரத்தில் கண்ணகி, மாதவி, இடையர் குலப்பெண்கள் மற்றும் கவுந்தி அடிகள் ஊடாக எடுத்துக் காட்டப்படுவதினைக் காணலாம். அறநூற் காலப் பகுதியாக சங்க மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் எவ்வாறு பெண்களின் வாழ்வியல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையை இனங்காணல் ஆய்வுப் பிரச்சினையாகும். சிலப்பதிகாரத்தில் பெண்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்துரைத்தல் பிரதான நோக்கமாக அமைகிறது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க காலம், *சிலப்பதிகாரம்*, பெண்கள், வாழ்க்கை, கண்ணகி, விருந்தோம்பல்.

**முன்னுரை**

தமிழக இலக்கிய வரலாற்றில் கி.பி 3 தொடக்கம் 6 வரையான காலப்பகுதி சங்க மருவிய காலமாகும். சங்கங்கள் மருவி போனதால் சங்க மருவிய காலம் என அழைக்கப்பட்டதோடு அறநூற் காலமாகவும் விளங்கியது. சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்றாகும். சிலப்பதிகாரம் தமிழில் எழுதப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகும். இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றினையும் காணலாம். காப்பியம் என்பது தன்னிகரில்லாத தலைவனை உடையதாகவும் நாடு, நகர், இயற்கை வருணனைகள் பெற்று அறம், பொருள் இன்பம், வீடு என்னும் உயர்ந்த நோக்கங்களைத் தாங்கி அமைவதாகும். பொதுவாக அரசர்களையே தலைவர்களாகக் கொண்டு காப்பியம் இயற்றல் இயல்பாகும். ஆனால் இக்காப்பியம் மக்களுள் சிறந்தவனாகிய கோவலனையும் கற்பின் செல்வியாகிய கண்ணகியையும் காப்பியத் தலைவர்களாக வைத்து இயற்றப் பெற்றுள்ளது. கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. ஏனைய நூல்கள் அரசனையோ தெய்வங்களையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டிருக்க சிலப்பதிகாரம் கோவலன் என்ற குடிமகனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டதால் இதனை குடிமக்கள் காப்பியம் என்றும் கூறுவர். இன்பியலும் துன்பியலும் கலந்து எழுதப்பட்ட இந்நூலை இயற்றியவர் இளங்கோ அடிகள் ஆவார். சிலப்பதிகாரம் என்ற சொல் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆனதால் சிலப்பதிகாரம் என பெயர் பெற்றுள்ளது.

பெண்மைக்கு உயர்வு தரும் நோக்கில் சிலப்பதிகாரம் படைக்கப்பட்டுள்ளது. சங்க மருவிய காலத்தில் பெண்கள் இல்லற வாழ்வில் சிறந்தவர்களாகவும் அறத்தில் மேன்மை பெற்றவர்களாகவும் திகழ்ந்துள்ளமையைக் காணலாம். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையின் வெளிப்பாடே பண்பாடாகிறது. வாழ்க்கை அமைப்பு என்பது அச்சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், கலைகள், இலக்கியங்கள் முதலியவற்றால் அறியப்படுவதாகும். அன்றாடம் மற்றும் அடிக்கடி பின்பற்றப்படும் நடைமுறைகள் வாழ்வியல் முறைகளாகும். பெண்களின் வாழ்வோடு இணைந்த விடயங்கள் வாழ்வியல் அம்சங்களாகும். பெண்களின் வாழ்வியல் அம்சங்களான இல்லற வாழ்வு, விருந்தோம்பல், கற்புநெறி, குழந்தைப்பேறு, தானம் மற்றும் துறவறம் போன்றன சிலப்பதிகாரத்தில் கண்ணகி, மாதவி, இடையர் குலப்பெண்கள் மற்றும் கவுந்தி அடிகள் ஊடாக எடுத்துக்காட்டப்படுவதினைக் காணலாம்.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

**பூப்புச்சடங்கு**

பூர்வக் கிரியைகளில் பெண்களுக்கானவொரு தனித்துவமான சடங்கு முறையாக பூப்புச்சடங்கு காணப்படுகிறது. பாரம்பரியமான சடங்கு முறைகளிலிலும் இச்சடங்கு

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

முறையானது முக்கியத்துவம் பெறுவதினைக் காணலாம். பெண்பால் முதிர்ச்சி அடைந்து முதலாவது மாதப்போக்கினை காணல் பூப்பெய்தல் ஆகும். பெண் பிறந்துள்ள குடும்பத்தில் பெருமையாகவும் மகிழ்வாகவும் நடைபெறுகின்ற ஓர் சடங்கு பூப்புச் சடங்காகும். சிலம்பு. மங்கல வாழ்த்து 22-24 பாடல் வரிகளின் ஊடாக கண்ணகி பருவம் அடைந்த பின் இடம்பெற்ற சடங்கு முறைகளை அறிய முடிகிறது. **"ஈகை வான் கொடிஅன்னாள் ஈராறுஆண்டுஅகவையாள்…" (சிலப்பதிகாரம்)** கண்ணகி பருவம் அடைய அவளுக்கு இவ்சடங்கு மேற்கொண்டமையைக் காணலாம். வணிக குலத்தில் பிறந்த கண்ணகிக்கு அவ் குலமரபின்படி பூப்புச்சடங்கு மேற்கொண்டமையினைக் காணலாம்.

**இல்லறவாழ்வு**

இல்லற வாழ்க்கையில் மிக முக்கியமானவொரு சடங்காக திருமணச் சடங்கு அமைகிறது. இவ்சடங்கு முறையானது ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் இணைந்து வாழ்வதற்கான அங்கீகாரத்தினை வழங்குகின்றது. கண்ணகியின் திருமணம் பற்றி புகார்க் காண்ட மங்கல வாழ்த்துப் பாடல் கூறுகிறது.

**…வானூர் மதியஞ் சகடணைய சாலிஒரு**
**மீன் தகையாளைக் கோவலன்**
**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
**தீவலம் செய்வது காண்பார் கண் நோன்புஎன்னை (சிலப்பதிகாரம்)**

இல்லறவாழ்க்கையில் கணவன் துன்பம் அடைந்திருக்கும் வேளையில் மனைவியானவள் அவன் துன்பத்தினை களைந்து அவன் உடனிருந்து வெற்றிக்கு வழி வகுக்கவேண்டும். சிலப்பதிகாரத்தில் மாதவியை பிரிந்த கோவலன் கண்ணகியை காணும் போதுதன் அவல நிலையை எண்ணி மனங்கலங்கி நின்ற பொழுது கண்ணகி,

**சிலம்பு உள கொண்மின் எனச்சேயிழைகேள் இச்**
**சிலம்பு முதலாகச் சென்றகலனோடு… (சிலப்பதிகாரம்)**

எனக் கூறி தன் கணவனுக்கு துணையாக இருந்து அவன் மனக்கலக்கம் தீர வழிகாட்டி அவன் உடன் இருந்து ஊக்கம் ஊட்டுவதினைக் காணமுடிகிறது.

**விருந்தோம்பல்**

கணவனுக்கு உணவு சமைத்து பரிமாறும் பண்பு ஒவ்வொரு மனைவியிடத்தும் காணப்படுகின்ற பண்பாக அமைகிறது. அன்றைய காலகட்டத்தில் இப்பண்பானது ஒரு சம்பிரதாயமாக காணப்பட்டமையைக் கண்ணகி காப்பியம் மூலம் நாம் காணக்கூடியதாக அமைகிறது. விரிவாக நோக்கின், கண்ணகி உணவு சமைத்து முடித்த பின்னர் **"கோவலனின் பாதங்களை வணங்கி நிலத்தில் நீர் தெளித்து மெழுகி வாழையின் குருத்தில் உணவு இட்டுஅமுதம் உண்க அடிகள்" (சிலம்பு., கொலைக்களக்காதை. 29-43)** என்று அன்புடன் கூறுகிறாள். அத்தோடு **"அடிசில் ஆக்குவதற்கு அமைந்தநற் கலங்கள்…" (சிலம்பு.,**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**அடைக்கலகாதை 20-21)** எனும் பாடல் வரிகளும் கண்ணகி உணவு சமைத்து கோவலனுக்கு வழங்கியமை எடுத்துக்காட்டுகிறது. சாப்பிட்ட பின்னர் வெற்றிலை பாக்கு கணவனுக்கு கொடுத்தலும் ஒரு சம்பிரதாயமாக காணலாம். அதனை, **உண்டினிது இருந்த உயர்பேராளற்கு... (சிலப்பதிகாரம்)** எனும் பாடல் வரியின் மூலம் இனங்காணமுடிகிறது.

**தானம்**

அடைக்கல காதையில் தானத்தின் சிறப்பு கூறப்படுவதினைக் காணலாம். புகாரில் சாயலன் எனும் வணிகன் இருந்தான். அவன் மனைவி அவளுக்கு ஏற்பட்ட குறை நீங்க அன்னதானம் அளித்தாள். ஒருநாள் தவமுனிவர் வருகைதர அவரினை அழைத்து உணவளித்தாள். அவ்வேளை குரங்கு ஒன்று வந்து அவ்முனிவர் பாதம் பணிந்து அவர் உட்கொண்ட உணவின் மீதியை உண்டு பசியாறியது. அவ்வேளையில் அவ்வீட்டின் தலைவனாகிய சாயலன் மனைவியைப் பார்த்து இக்குரங்கையும் உன் பிள்ளைபோல் பாதுகாப்பாயாக என்றார். அத்தவமுனி கூறிய அருள் மொழியை ஏற்ற சாயலன் மனைவி அக்குரங்கினை வளர்த்து அது இறந்த பின்பும் அதன் தீவினை ஒழிய தானம் செய்து வந்தாள் என சிலப்பதிகாரம் கூறுகிறது.

**கைம்மைநோன்பு**

**"கணவன் இறந்த பின்பு மனைவி நோற்கும் ஒரு நோன்பாக கைம்மை நோன்பு காணப்படுகிறது. கணவனை இழந்த பெண்கள் விதவைக் கோலம் பூண்டும் நீர் நிலைகளில் நீராடி பாவம் போக்கித் திரியும் பாவிகளாக ஆக்கப்பட்டிருந்தனர்." (த.மேகராசா. 57)** குறிப்பாக, கோவலன் இறந்த பின்பு மாதவி விதவைக்கோலம் பூணாமல் நீர் நிலைகளில் நீராடி கைம்மை நோன்பு நோற்கவில்லை. மாறாக துறவறம் பூணுகின்றமையைக் காணலாம். இதனூடாக மறைமுகமாக கண்ணகி காப்பியத்தில் கைம்மை நோன்பு பெண்களினால் அனுஸ்டிக்கப்பட்டமையினை இனங்காணலாம். இந்து சம்பிரதாயம் முறையாக அக்காலத்தில் கைம்மை நோன்பு நோற்றல் காணப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்திலும் சில பிரமாண சமூகத்தில் இவ் சம்பிரதாயம் காணப்படுகின்றது.

**துறவறம்**

உலக இன்பங்களை துறந்து இறைவன் வழி செல்வது துறவறம் ஆகும். ஆண்களுக்கு மட்டுமல்ல துறவறம் பெண்களுக்கும் பொருந்தும். சிலப்பதிகாரத்தில் கவுந்திஅடிகள் மூலம் துறவற வாழ்க்கை எடுத்துக் காட்டப்படுகிறது. சமணத் துறவியான கவுந்திஅடிகள் வாழ்க்கைத் தத்துவங்கள் அனைத்தையும் உணர்ந்து தெளிந்த நிலையில் அன்பின் சிகரமாகவும் அருளின் வடிவமாகவும் அறிவும் ஆற்றலும் பெற்றவராக விளங்கினார்.

**பொருள் இல் யாக்கை பூமியில் பொருந்தாது**
**அருகர் அறவன் அறிவோற்கு அல்லதுஎன்**
**இருகையும் கூடி ஒருவழிக் குவியா**

**மலர் மிசைநடந்தோன் மலர் அடி அல்லதுஎன்**
**தலைமிசை உச்சிதான் அணிப் பொறாஅது (சிலப்பதிகாரம்)**

எனும் பாடலின் ஊடாக கவுந்திஅடிகளின் துறவற வாழ்க்கை தெளிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. துறவற வாழ்வின் மேன்மை தவசீலர்களாக மாற்றும். கவுந்திஅடிகளின் தவவாழ்வின் சிறப்பினை பின்வருமாறு நோக்கலாம். கண்ணகியையும் கோவலனையும் இகழ்ந்து பேசிய தாசி மற்றும் தீயவனை நரிகளாக மாற்றி தண்டனை வழங்கியமை. இதனை பின்வரும் பாடலின் ஊடாக காணலாம்.

**முள்ளுடையக் காட்டில் முது நரிஆகஎனக்**
**கவுந்தி இட்டதவம் தருசாபம்… (சிலப்பதிகாரம். ப. 176)**

**முடிவுரை**

பெண்மையின் பெருமையையும் அறத்தின் வெற்றியையும் எடுத்துக்கூறும் காப்பியம் என்ற வகையில் சிலப்பதிகாரம் முக்கியத்துவம் பெறுகிறது. பெண்களின் வாழ்வோடு இணைந்த விடயங்கள் வாழ்வியல் அம்சங்களாகும். பெண்ணானவள் தனது பிறப்பு தொடக்கம் இறப்பு வரையில் பலவிதமான வாழ்க்கைமுறைக்கு ஆளாகுகின்றமையினைக் காணலாம். இதன் மூலம் தனது இல்லற வாழ்வின் சிறப்பினையும் பெண்மையின் பெருமையினையும் எடுத்துக் காட்டுகிறாள். பெண்களின் வாழ்வியல் அம்சங்களை சிலப்பதிகாரத்தில் மேற்கண்டவகையில் காணமுடிகிறது.

**குறிப்புகள்**

[1] சண்முகம் செட்டியார், ஆர்.கே. *சிலப்பதிகாரம்.* புதுமலர் நிலையம்,சென்னை.1945.
[2] சஞ்சீவி,ந. *சிலப்பதிகார விருந்து.* காவ்யாவெளியீடு,சென்னை. 2005.
[3] சிவஞானம்,ம,பொ. *சிலப்பதிகார திறனாய்வு.* பூங்கொடி பதிப்பகம். 2005.
[4] சுதாகர், கு. *கண்ணகி கதைகள்.* பாவை பிரின்ரஸ், சென்னை. 2011.
[5] மேகராசா,த. *சிலப்பதிகார பாத்திரங்களும் கண்ணகி வழக்குரை பாத்திரங்களும்.* மட்டக்களப்பு, 2015.
[6] ta.m.wikipedia.org 01.11.2024 அன்று அணுகப்பட்டது.
[7] www.dinamani,com.junction/ettaam-swarangal/2018/jun/14 08.11.24 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.